**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 144** **நாள்: 17.09.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் அனுமதியில்லாமல் விளம்பரப் பலகைகள், டிஜிட்டல் பேனர்கள், பதாகைகள் மற்றும் சுவர் விளம்பரங்கள் மேற்கொள்பவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

---------

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மண்டலம்–1 முதல் 15 வரை (வார்டு எண். 1 முதல் 200 வரை) அனுமதியில்லாமல் விளம்பர பலகைகள், டிஜிட்டல் பேனர்கள், பதாகைகள் மற்றும் சுவர் விளம்பரங்கள் மேற்கொள்ளும் தனியர்கள் மற்றும் தனியார் விளம்பர நிறுவனங்கள் மீது சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம்–1919, விதி எண்.326 – I ன்படி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படும். அதனடிப்படையில் மூன்று ஆண்டுகள் சிறை தண்டனை அல்லது அனுமதியில்லாமல் வைக்கப்பட்ட ஒரு விளம்பர பலகைக்கு ரூபாய் பத்தாயிரம் வீதம் (ரூ.10,000/–) அபராதத் தொகையாகவோ அல்லது இரண்டும் சேர்த்து விதிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், கட்டிட உரிமையாளர்கள், தங்களுக்கு சொந்தமான கட்டிடத்தில் விளம்பரப் பலகைகள் அமைத்து விளம்பர நிறுவனங்கள் விளம்பரம் மேற்கொள்ள அனுமதிக்கும் பட்சத்தில், அவ்விளம்பர நிறுவனங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியிடம் உரிமம் பெற்றிருந்தால் மட்டுமே அனுமதிக்க வேண்டும். அவ்வாறு உரிமம் இல்லாமல் விளம்பரப் பலகை அமைக்க கட்டிடத்தின் உரிமையாளர் அனுமதிக்கும் பட்சத்தில் கட்டிடத்தின் உரிமையாளர் மீதும் கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதுவரை பெருநகர சென்னை மாநகராட்சியால் சுமார் 108 விளம்பரப் பலகைகளுக்கு மட்டுமே உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

விளம்பரப் பலகைகள் அமைப்பதற்கு உரிமம் அளிக்கப்பட்ட இடங்களில் அவ்விளம்பரப் பலகையின் கீழ்பகுதியில் உரிம எண், உரிமம் வழங்கப்பட்ட நாள், அனுமதி அளிக்கப்பட்ட அளவின் விவரம், உரிமத்தின் கால அவகாசம், விளம்பர நிறுவனத்தின் பெயர் மற்றும் தொலைபேசி எண் ஆகியவை தவறாமல் குறிப்பிடப்பட வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்படவில்லை எனில், அவ்விளம்பர பலகைகள் அனுமதி இல்லாமல் வைக்கப்பட்ட விளம்பர பலகைகளாக கருதப்பட்டு, அவ்விளம்பர பலகைகள் உடனடியாக அகற்றப்படுவதுடன், சம்பந்தப்பட்ட விளம்பர நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**